கார்கே சொன்ன தீபாவளி வாழ்த்தால் சர்ச்சை: காங்கிரஸ் கட்சிக்கு பாஜக சவால்

புது தில்லி, நவ.9: தீபாவளிக்கு காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே சொன்ன வாழ்த்தால் சர்ச்சை வெடித்துள்ள நிலையில், ஈத் பண்டிகையன்று தீபாவளி கொண்டாட்டம் என வாழ்த்து தெரிவிக்க முடியுமா என்று காங்கிரஸ் கட்சிக்கு பாஜக புதிய சவால் விடுத்துள்ளது.

தீபாவளி பண்டிகை ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது. இதையொட்டி கார்கே வாழ்த்து தெரிவித்தபோது, 'ஈத் எனும் மகிழ்ச்சி' என்று தீபாவளியை குறிப்பிட்டிருந்தார். இதனால் கடும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. கார்கே கருத்துக்கு பாஜக கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் கௌரவ் பாட்டியா கூறுகையில், 'முஸ்லிம் மக்களை திருப்திப்படுத்துவதற்காக காங்கிரஸ் கட்சி ஹிந்துக்களின் மத பாரம்பரியங்களை அவமதிக்கும் செயலில் ஈடுபட்டுள்ளது. காங்கிரஸ் கட்சியின் மரபணு இதுதான். கொண்டாட்டம், மகிழ்ச்சி, அனைவரையும் உள்ளடக்கியதுக்கான அடையாளமான விழாவன்று ஹிந்துக்களின் மத உணர்வுகளை காங்கிரஸ் புண்படுத்தியுள்ளது. கார்கேயிடம் ஹிந்துக்களுக்கு வாழ்த்தை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. சோனியா, ராகுல் காந்தி இயக்குவது போல செயல்படுகிறார் கார்கே. அவர்களின் கருத்தையே கார்கேயின் வாழ்த்து பிரதிபலிக்கிறது. காங்கிரஸின் தலைவரான கார்கே, சோனியா, ராகுல் ஆகியோரின் ரிமோட் கண்ட்ரோல் மூலம் இயக்கப்படுகிறார்.

தீபாவளி பண்டிகையை அதற்கு உரித்தான பெயரில் 'தீபாவளி மிகப்பெரிய திருவிழா' என கார்கே கூறுவதில் என்ன பிரச்னை உள்ளது? ராகுல் காந்தி, கார்கேயிடம் ஒன்று கேட்கிறேன். ஈத் பண்டிகையை தீபாவளி கொண்டாட்டம் என தெரிவிக்கும் தைரியம் உங்களுக்கு உள்ளதா?' என்றார்.

பாஜக தேசிய ஊடக பிரிவு பொறுப்பாளர் பிரதீப் பண்டாரி கூறுகையில், 'தீபாவளியன்று வாக்கு வங்கி அரசியலில் காங்கிரஸ் ஈடுபட்டுள்ளது. பாப்ரி மசூதிக்காக சோனியா அழுதார். சனாதனத்தை முன்பு சிலர் விமர்சித்தபோது காங்கிரஸ் மௌனமாக இருந்தது. சோனியா காந்தி வதேரா குடும்ப கொள்கையின்படி செயல்படும் காங்கிரஸ், சனாதனத்துக்கு எதிரானது, ஹிந்துக்களுக்கு எதிரானது' என்றார்.

உ.பி.: 6 சாலை விபத்துகளில் 17 பேர் உயிரிழப்பு

லக்னௌ, நவ.9: தீபாவளி பண்டிகைக்கு அடுத்த நாளான திங்கள்கிழமை உத்தர பிரதேசத்தில் 6 இடங்களில் நிகழ்ந்த சாலை விபத்துகளில் 17 பேர் உயிரிழந்தனர். 55 பேர் காயமடைந்தனர்.

முஸாஃபர்நகரின் ஜகஹேடி கிராமத்துக்கு அருகே திங்கள்கிழமை அதிகாலை 4.50 மணியளவில் வேகமாக சென்ற கார், மின் கம்பத்தில் மோதி தீப் பிடித்து எரிந்ததில், அதில் பயணித்த 6 பேரும் உடல் கருகி உயிரிழந்தனர்.

சித்ரகூட்டில் 25 பேரை ஏற்றிச் சென்ற டிராக்டர், மாவ் தாலுகாவுக்கு உட்பட்ட ராம்நகருக்கு அருகே நள்ளிரவு 2.30 மணியளவில் கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்த விபத்தில் இரு குழந்தைகள் உள்பட நால்வர் உயிரிழந்தனர். 12 பேர் காயமடைந்தனர்.

ராஜஸ்தானின் பீவாரிலிருந்து பிகாரின் சாப்ரா நோக்கி 44 பேருடன் சென்ற பேருந்து லக்னௌ - ஆக்ரா விரைவுச் சாலையில் காலை 6 மணியளவில் சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் மூவர் உயிரிழந்தனர். 41 பேர் காயமடைந்தனர்.

இந்த சாலை விபத்துகள் அனைத்தும் அதிகாலை நேரத்தில் நிகழ்ந்துள்ளன. தீபாவளியன்று வெடித்த பட்டாசு புகை மூட்டம் மற்றும் பனிப்படலத்தால், சாலை தெளிவாகத் தெரியாத காரணத்தால் இந்த விபத்துகள் நிகழ்ந்திருக்க வாய்ப்புள்ளது என முதல் கட்ட விசாரணையில் தெரியவந்ததாக போலீஸார் தெரிவித்தனர்.

ம.பி.: மத்திய பிரதேச மாநிலம் சாகர் மாவட்டத்தில் திங்கள்கிழமை அதிகாலை லாரியும் காரும் மோதிக்கொண்ட விபத்தில் நால்வர் உயிரிழந்தனர். ஐவர் காயமடைந்தனர்.

இது குறித்து போலீஸார் கூறுகையில், 'பயின்சா கிராமத்தைச் சேர்ந்தவர்கள் பர்மனில் உள்ள நர்மதையாற்றில் புனித நீராடுவதற்காக காரில் சென்றபோது, கோபால்புரா அருகே தேசிய நெடுஞ்சாலையில் எதிரே வந்த லாரி மீது மோதி இந்த விபத்து நிகழ்ந்தது. மோதியதில் காரின் முன் பகுதி கடுமையாக சேதமடைந்தது. இதில் காரில் பயணித்த நால்வர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். காயமடைந்த மற்ற ஐவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தப்பியோடிய லாரி ஓட்டுநரை பேலீஸார் தேடி வருகின்றனர்' என்றனர்.

ஜார்க்கண்ட்: ஜார்க்கண்ட் மாநிலம் ஹஸாரிபாக் மாவட்டத்தில் நின்றுகொண்டிருந்த தொழிலாளர்களை ஏற்றிவந்த வேன் மீது லாரி மோதிய விபத்தில் ஐவர் உயிரிழந்தனர். 14 பேர் காயமடைந்தனர்.

ஜார்க்கண்டின் கிரித் பகுதியிலிருந்து 19 தொழிலாளர்களை ஏற்றிக்கொண்டு உத்தர பிரதேசத்தின் வாரணாசி நோக்கி சென்ற வேன், தனுவா பள்ளத்தாக்கு அருகே மகாநாத்தில் திங்கள்கிழமை காலை 10.30 மணியளவில் இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த போது, இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. காயமடைந்தவர்களில் மூன்று பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று போலீஸார் தெரிவித்தனர்.

பாக்யலட்சுமி வழிபாடு!



தெலங்கானா மாநிலம் ஹைதராபாதில் சார்மினாரையொட்டியுள்ள பாக்யலட்சுமி கோயிலில் வழிபட திங்கள்கிழமை திரளாக வந்த பொதுமக்கள்.

அத்வானியின் 100-ஆவது பிறந்த நாள்: பிரதமர் மோடி நேரில் வாழ்த்து

புது தில்லி, நவ. 9: பாஜக முது பெரும் தலைவரும், முன்னாள் துணை பிரதமருமான எல்.கே. அத்வானியின் 100-ஆவது பிறந்த தினத்தையொட்டி, தில்லியில் உள்ள அவரது இல்லத்துக்கு ஞாயிற்றுக்கிழமை சென்று பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்தார்.

கடந்த 1927, நவ.8-ஆம் தேதி கராச்சியில் (தற்போதைய பாகிஸ்தானில் உள்ளது) பிறந்தவர் எல்.கே.அத்வானி. 1947-இல் தேசப் பிரிவினையின்போது, அவர் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்தார். ஆர்எஸ்எஸ் அமைப்பில் தீவிரமாக செயலாற்றிய அத்வானி, பின்னாளில் பாரதிய ஜன சங்கத்தின் முக்கிய தலைவராக உருவெடுத்தார்.

முன்னாள் பிரதமர் வாஜ்பாயுடன் இணைந்து 1980-இல் பாஜகவை நிறுவியதுடன், அக்கட்சியின் தேசியத் தலைவராக பல முறை பணியாற்றியுள்ளார்.

வாஜ்பாய் ஆட்சியில் மத்திய உள்துறை அமைச்சர் (1998-2004), துணை பிரதமர் (2002-2004) பதவிகளையும் வகித்துள்ளார். அத்வானியின் 100-ஆவது பிறந்த தினத்தையொட்டி, தில்லியில் உள்ள அவரது இல்லத்துக்கு பிரதமர் மோடி ஞாயிற்றுக்கிழமை நேரில் சென்று வாழ்த்து தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'எல்.கே.அத்வானி 100-ஆவது வயதில் அடியெடுத்து வைத்திருப்பது சிறப்புக்குரிய தருணமாகும். அவருக்கு எனது வாழ்த்துகள். தேசப் பிரிவினையின் கொடுமைகளை அனுபவித்து, அதிலிருந்து வாழ்க்கையை புதிதாக கட்டியெழுப்பியது, ஜன சங்கத்தை வலுப்படுத்தியது, பாஜகவை கட்டமைத்தது, அவசரநிலையின்போது ஜனநாயகத்துக்காகப் போராடியது, சோம்நாத்தில் இருந்து அயோத்தி வரை ரத யாத்திரை மேற்கொண்டது, அரசு சார்பில் தேசத்துக்கு சேவையாற்றியது என அவரது பயணத்தை நினைவுகூர்கிறேன்' என்று தெரிவித்துள்ளார்.

மேலும், நாட்டுக்கு அத்வானி ஆற்றிய பங்களிப்புகளை முன்னிறுத்தி, தாம் எழுதிய கட்டுரையையும் பிரதமர் பகிர்ந்துள்ளார்.

பாலியல் கொலை வழக்கு: குற்றஞ்சாட்டப்பட்ட நபர் என்கவுன்ட்டரில் சுட்டுக் கொலை

கொல்கத்தா, நவ. 9: மேற்கு வங்கத்தில் 12 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை மற்றும் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர், போலீஸ் என்கவுன்ட்டரில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

போலீஸார் தற்காப்புக்காக துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்டதாக முதல்வர் சுவேந்து அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்கத்தின் உத்தர் தினாஜ்பூர் மாவட்டத்தின் ராய்கஞ்ச் பகுதியைச் சேர்ந்த 12 வயது சிறுமி, கடந்த நவ.3-ஆம் தேதி தனது வீட்டில் இருந்து சைக்கிளில் வெளியே சென்றார். அதன் பிறகு வீடு திரும்பவில்லை. இரண்டு நாள்களுக்குப் பிறகு குலிக் நதிக்கு அருகே உள்ள வனப்பகுதியில் ஆடைகளற்ற நிலையில் அவரது உடல் கண்டெடுக்கப்பட்டது. சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு, கொல்லப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இது தொடர்பாக காவல் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், 'சிறுமியின் உறவினரான திலீப் ராய், நதிக்கு அருகே உள்ள வனப் பகுதியை பார்க்கலாம் என்று கூறி அவரை ஏமாற்றி அழைத்துச் சென்றுள்ளார். பின்னர், அவரை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கி, கொலை செய்து உடலை வனப்பகுதியில் வீசிவிட்டு தப்பியுள்ளார். கடந்த 4 நாள்களாக திலீப் ராயை காவல் துறையினர் தேடி வந்தனர்.

இதனிடையே, மேற்கு வங்கம்-பிகார் எல்லையில் உள்ள பரபுகுர் பகுதியில் திலீப் ராய் பதுங்கியிருப்பதாக தகவல் கிடைக்கப் பெற்றது. இதை யடுத்து, அந்தப் பகுதியை திங்கள்கிழமை அதிகாலையில் சுற்றிவளைத்த காவல் துறையினர், தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்போது, தன்னிடமிருந்த துப்பாக்கியால் காவல் துறையினரின் வாகனத்தை நோக்கி, திலீப் ராய் திடீரென துப்பாக்கியால் சுட்டார். இதில், வாகனத்தின் டயரில் குண்டு பாய்ந்தது. காவல் துறையினர் தற்காப்புக்காக நடத்திய பதிலடி துப்பாக்கிச்சூட்டில் திலீப் ராய் படுகாயமடைந்தார். அவரை ராய்கஞ்ச் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு காவல் துறையினர் கொண்டு சென்றனர். அங்கு மருத்துவர்களின் பரிசோதனையில் அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டது உறுதி செய்யப்பட்டது' என்றார்.

பாஜக ஆட்சியில் 4-ஆவது சம்பவம்: மேற்கு வங்கத்தில் பாஜக கடந்த மே மாதம் முதல் முறையாக பதவியேற்ற பிறகு நடைபெற்ற 4-ஆவது என்கவுன்ட்டர் சம்பவம் இதுவாகும்.

கடந்த ஜூலையில் தெற்கு 24 பர்கானாக்கள் மாவட்டத்தின் பருய்பூரில் 11 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை-கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட பிரபாஸ் மோண்டல், கடந்த அக்டோபரில் வடக்கு 24 பர்கானாக்கள் மாவட்டத்தின் கைகடா பகுதியில் 11-ஆம் வகுப்பு மாணவி பாலியல் வன்கொடுமை - கொலை வழக்கில் கைதான பிரஹலாத் தாஸ், முர்ஷிதாபாதின் சம்ஷேர்கஞ்ச் பகுதியில் கடந்த அக்டோபரில் பாஜக தொண்டர் கொலை வழக்கில் கைதான சமாயுல் ஹக் என்பவரும் என்கவுன்ட்டரில் கொல்லப்பட்டனர்.

காங்கிரஸ் நன்கொடை 75% சரிவு

புது தில்லி, நவ.9: காங்கிரஸ் கட்சி ரூ. 20,000-க்கு மேல் பெறும் தேர்தல் நன்கொடைகளின் அளவு 2025-26-ஆம் ஆண்டில் 75 சதவீதம் அளவுக்கு சரிந்திருப்பது, அக் கட்சி சார்பில் தேர்தல் ஆணையத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.

அரசியல் கட்சிகள் ரூ. 20,000-க்கு மேல் பெறும் தேர்தல் நன்கொடைகள் தொடர்பான முழு விவரத்தையும் தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்க வேண்டும்.

அதன்படி, காங்கிரஸ் கட்சி சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில், 'அக் கட்சிக்கு 2023-ஆம் ஆண்டில் ரூ. 281.48 கோடியும், மக்களவைத் தேர்தல் நடைபெற்ற 2024-25-ஆம் ஆண்டில் ரூ. 517.39 கோடியும் கிடைத்த நிலையில், 2025-26-ஆம் ஆண்டில் ரூ. 130.69 கோடியும் நன்கொடையாகக் கிடைத்துள்ளது. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் 75 சதவீதம் சரிவு என்பதோடு, அக் கட்சிக்கு கடந்த 10 ஆண்டுகளில் கிடைத்த நன்கொடைகளைவிட குறைவானது என்றும் தெரியவந்துள்ளது.

முன்னதாக, 2015-16-ஆம் ஆண்டில் அக் கட்சியின் நன்கொடை மிகப் பெரும் சரிவைச் சந்தித்தது. அதாவது, முந்தைய ஆண்டில் அக் கட்சிக்கு ரூ.141.46 கோடி நன்கொடை கிடைத்த நிலையில், 2015-16-ஆம் ஆண்டில் அது 86 சதவீதமாக சரிந்தது. தற்போது இரண்டாவது முறையாக அக் கட்சிக்கு மிகப் பெரும் நன்கொடை சரிவு ஏற்பட்டுள்ளது.

பாஜகவுக்கு 12 மடங்கு அதிகம்... மத்தியில் ஆளும் பாஜகவுக்கு 2024-25-ஆம் ஆண்டில் ரூ. 6,074.02 கோடி நன்கொடை கிடைத்தது. இது, அதே ஆண்டில் காங்கிரஸுக்கு கிடைத்ததை விட 12 மடங்கு அதிகமாகும்.

பாலியல் வன்கொடுமை வழக்கு: திரிணமூல் எம்எல்ஏ கைது

கொல்கத்தா, நவ.9: பாலியல் வன்கொடுமை, கடத்தல், தேர்தல் வன்முறை தொடர்பான வழக்குகளில் திரிணமூல் காங்கிரஸ் எம்எல்ஏ பரேஷ் ராம் தாஸ் திங்கள்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுதொடர்பாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டபிறகு, திரிணமூல் காங்கிரஸ் எம்எல்ஏ பரேஷ் ராம் தாஸ் தலைமறைவாக இருந்தார். இந்நிலையில், கொல்கத்தா விமான நிலையத்தில் இருந்து மும்பைக்கு செல்வதற்காக அவர் திங்கள்கிழமை மதியம் வந்தார். அப்போது அவரை பருய்பூர் காவல்நிலைய சிறப்பு படையினர் கைது செய்தனர்.

அவரை தெற்கு 24 பர்கானாக்கள் மாவட்டத்தில் உள்ள நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை ஆஜர்படுத்த காவல்துறையினர் முடிவு செய்துள்ளனர். மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக வென்று ஆட்சியமைத்துள்ளது.

ஆளும் கட்சியாக இருந்த திரிணமூல் காங்கிரஸ் ஆட்சியை பறிகொடுத்தது. அக்கட்சியின் எம்எல்ஏக்கள் இரு பிரிவுகளாக பிரிந்து செயல்பட்டு வருகின்றனர்.

பஞ்சாப் நேஷனல் வங்கி punjab national bank

கூடன் மீட்பு நிர்வாக கிளை (ARMB), எண்.448A, டாக்டர் நஞ்சப்பா ரோடு, கோயம்புத்தூர் - 641 018. போன் : 0422-2231314, 0422-2231345, மொபைல் : 99639 93409. மின்னஞ்சல் : cs4371@pnb.bank.in

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏலத்திற்கான பொது அறிவிப்பு : 18.12.2026 தேதி அன்று (காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை)

முன்வைப்புத் தொகை (EMD) மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி மற்றும் நேரம் : 18.12.2026 தேதி அன்று பிற்பகல் 3.00 மணி வரை

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.

பஞ்சாப் நேஷனல் வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) ஆகியோரிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட ஆக்கபூர்வ / கொள்நிலை / அடையான கவாதீனம் செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதியில் விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'எங்கு உள்ளதோ உள்ளபடி', 'என்ன உள்ளதோ உள்ளபடி', 'எப்படியுள்ளதோ உள்ள நிலையில்' விற்கப்படும். சொத்திற்கான குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை மற்றும் முன் வைப்புத் தொகை கீழே பட்டியலில் உள்ள விபரப்படியாகும்.

பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கிய வங்கிக்குத் தெரியவந்த ஏதேனும் வில்லங்கங்கள் குறித்த விபரம் : (காங்கேயம் சார் பதிவகத்தில் 03.11.2026 தேதிய ஆன்லைன் வில்லங்கச் சான்றின்படி) : 1. ஆவண எண்.43/2004 / நீதிமன்ற உத்தரவுகள்/பதிவு தேதி : 24.10.2024/ M/s.சன் கோகோ புராடக்ட்ஸ் (உரிமையாளர் : திரு.S.வெங்கடேஷ் குமார்) -க்கு எதிராக திருப்பூர் மாவட்ட நீதிமன்ற உத்தரவுகள்.

பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் அட்டவணை

லாட் எண்.	கிளையின் பெயர் மற்றும் கணக்கின் பெயர் மற்றும் கடன்தாரர்/உத்தரவாதமளித்தவர் பெயர் மற்றும் விலாசம்	பிணையப்பட்ட அசையாச் சொத்து விபரம் /உரிமையாளரின் பெயர் (சொத்தின் அடமானதாரர்/கள்)	அ) 2002 சர்பாஸி சட்டத்தின் பிரிவு 13(2)ன் படியான கேட்பு அறிவிப்பு தேதி ஆ) நிலுவைத் தொகை இ) 2002 சர்பாஸி சட்டத்தின் பிரிவு 13(4)ன் படியான கவாதீனம் எடுத்த தேதி ஈ) கவாதீனத்தின் தன்மை கொள்நிலை/ஆக்கபூர்வ கவாதீனம்	1) ரிசர்வ் விலை 2)முன்வைப்புத் தொகை (EMD) 3) ஏல மடங்குத் தொகை
1.	**BO : திருப்பூர் (ID : 044900) (குற்போது கோயம்புத்தூர் ARMBக்கு மாற்றப்பட்டுள்ளது)** **M/s.சன் கோகோ புராடக்ட்ஸ்** **கடன்தாரர் :** **M/s.சன் கோகோ புராடக்ட்ஸ்** **(உரிமையாளர் :** **திரு.S.வெங்கடேஷ் குமார்),** எண்.97/111, சடையம்பாளையம், கோவை ரோடு, காடையூர், காங்கேயம், திருப்பூர்-638 701. **உரிமையாளர்/அடமானதாரர்:** **திரு.S.வெங்கடேஷ் குமார் (M/s.சன் கோகோ புராடக்ட்ஸ்-ன் உரிமையாளர்),** த/பெ.திரு.சுப்ரமணியம், எண்.95, சடையம்பாளையம், காங்கேயம், ஜெய் கிருஷ்ணா அரிசி ஆலை அருகில், திருப்பூர் - 638 701. **மேலும் :** எண்.11/660, பாறைக்காடு, சிவன்மலை ரோடு, சிவன்மலை, திருப்பூர் - 638 701	**லாட்-1 : திரு.S.வெங்கடேஷ் குமார் பெயரிலுள்ள சொத்து : இனம்-1 :** திருப்பூர் பதிவு மாவட்டம், காங்கேயம் சார் பதிவு மாவட்டம், காங்கேயம் தாலுகா, பழைய வடசின்னாரிபாளையம் கிராமம், தற்போது சம்பந்தம்பாளையம் கிராமம், மறு சர்வே எண்.199/2B, இதிலடங்கிய 1.2.00 ஹெக்டேர் புஞ்சை கிஸ்தி ரூ.1.41, இதற்கு பழைய சர்வே எண்.53, 16.03 ஏக்கர் புஞ்சை கிஸ்தி 8.98, இதில் எல்லைகளாக, தென்வடல் பைபாஸ் இட்டேரிக்கு மேற்கு, ஸ்ரீனிவாசன் வகையறா மற்றும் இளங்கோவில் பங்குச் சொத்திற்கு வடக்கு, PAP தென்வடல் பிரதான கால்வாய்க்கு மற்றும் மறு சர்வே எண்.199/2A சொத்துக்குக் கிழக்கு, ஸ்ரீனிவாசன் வகையறா மற்றும் கணேஷ்குமார் வகையறாவின் பங்குச் சொத்திற்குத் தெற்கு, இவ்வெல்லைகளுக்கிடையிலுள்ள 2.00 ஏக்கர் புஞ்சை நிலத்தின் எல்லைகள் விபரம் : தென்வடல் ரோட்டுக்கு மேற்கு, இளங்கோவின் பங்குச் சொத்துக்கு, துரைசாமி கவுண்டர் மற்றும் சாமியாத்தாள் தக்க வைத்திருந்த சொத்திற்கு, மறு சர்வே எண்.199/2A ல் உள்ள சொத்திற்குக் கிழக்கு, ஸ்ரீனிவாசன் வகையறா பங்குச் சொத்திற்கு வடக்கு, துரைசாமி கவுண்டர் மற்றும் சாமியாத்தாள் தக்க வைத்திருந்த சொத்திற்குத் தெற்கு. இதன் மத்தியில் உள்ள 1.12 ஏக்கர் புஞ்சை (0.45.34 ஹெக்டேர் புஞ்சை) நிலம், வழக்கமான வழித்தட உரிமையுடன். தற்போதைய உட்பிரிவின்படி புதிய மறு சர்வே எண்.199/2B2. **அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள் :** **10.993500 N, 77.517556 E**	அ) 03.02.2026 ஆ) **(க/கு : 0449008700333465) ரூ. 2,40,37,655.18 (ரூபாய் இரண்டு கோடியே நாற்பது லட்சத்து முப்பத்து ஏழாயிரத்து அறுநூற்று ஐம்பத்து ஐந்து மற்றும் பைசா பதினெட்டு மட்டும்) மற்றும் 31.10.2026 தேதி வரை மற்றும் 01.11.2026 தேதியிலிருந்து பிள்வட்டி** மற்றும் கட்டணங்கள் சேர்த்து இ) 23.06.2026 ஈ) அடையாளம்	**லாட்-1 :** **1) ரூ.1,51,20,000/-** (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து ஒரு லட்சத்து இருபதாயிரம் மட்டும்) **2) ரூ.15,12,000/-** (ரூபாய் பதினைந்து லட்சத்து பனிரெண்டாயிரம் மட்டும்) **3) ரூ.50,000/-** (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) **மின் ஏலத் தேதி மற்றும் நேரம் : 18.12.2026 (வெள்ளிக்கிழமை) காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை**
2.		**லாட்-2 : இனம்-2 : திரு.S.வெங்கடேஷ் குமார் பெயரிலுள்ள சொத்து :** திருப்பூர் பதிவு மாவட்டம், காங்கேயம் சார் பதிவு மாவட்டம், காங்கேயம் தாலுகா, பழைய வடசின்னாரிபாளையம் கிராமம், தற்போது சம்பந்தம்பாளையம் கிராமம், மறு சர்வே எண்.199/2B, இதிலடங்கிய 1.2.00 ஹெக்டேர் புஞ்சை கிஸ்தி ரூ.1.41, இதற்கு உட்பிரிவின்படி மறு சர்வே எண்.199/2B1, 0.54.66 ஹெக்டேர் புஞ்சை, நடப்பு உட்பிரிவு மறு சர்வே எண்.199/2B1B ல் 0.16.50 ஹெக்டேர் புஞ்சை கிஸ்தி ரூ.0.23, இதற்கு பழைய சர்வே எண்.53, 16.03 ஏக்கர் புஞ்சை கிஸ்தி ரூ.8.98, இதில் **எல்லைகளாக,** சர்வே எண்.52 ல் உள்ள தென்வடல் ரோடுக்கு மேற்கு, ஸ்ரீனிவாசன் வகையறா மற்றும் ரங்கசாமியின் பங்குச் சொத்திற்கு வடக்கு, தென்வடல் PAP பிரதான கால்வாய்க்கு மற்றும் மறு சர்வே எண்.199/2A சொத்திற்குக் கிழக்கு, ஸ்ரீனிவாசன் வகையறா மற்றும் கணேஷ்குமார் வகையறாவின் பங்குச் சொத்திற்குத் தெற்கு. இவ்வெல்லைகளுக்கிடையிலுள்ள 2.00 ஏக்கர் புஞ்சை கிஸ்தி ரூ.1.12, இதில் 0.50 ஏக்கர் புஞ்சை நிலத்தின் **எல்லைகள் விபரம் :** வெங்கடேஷ்குமாரின் பங்குச் சொத்திற்கு மற்றும் ஸ்ரீனிவாசன்வகையறாவின் பங்குச் சொத்திற்கு மேற்கு, நிர்மலின் 0.17 ஏக்கர் புஞ்சை பங்குச் சொத்திற்குத் தெற்கு, ரங்கசாமியின் பங்குச் சொத்திற்கு வடக்கு, சாமியாத்தாள் வகையறா தக்க வைத்திருந்த சொத்திற்கு கிழக்கு. இவ்வெல்லைகளுக்கிடையிலுள்ள, 0.50 ஏக்கர் புஞ்சை (0.20.24 ஹெக்டேர் புஞ்சை) நிலம். இதில் நிர்மல் அமைத்த 24 அடி அகல தென்வடல் மற்றும் கிழமேல் பொது ரோட்டுக்கான 0.09¼ ஏக்கர் புஞ்சை நிலம் கழித்தது போக, மீதமுள்ள சொத்து மறு சர்வே பட்டாவின்படி 0.40¾ ஏக்கர் புஞ்சை நிலம். இதன் **எல்லைகள் விபரம் :** நிர்மலின் 0.17 ஏக்கர் புஞ்சை சொத்து வரையான தென்வடல் மற்றும் கிழமேல் பொது ரோட்டுக்கு மேற்கு, சாமியாத்தாள் வகையறா தக்க வைத்திருந்த சொத்திற்குக் கிழக்கு, ரங்கசாமியின் பங்குச் சொத்திற்கு வடக்கு, நிர்மலின் 0.17 ஏக்கர் புஞ்சை சொத்திற்கு மற்றும் கிழமேல் பொது ரோட்டுக்குத் தெற்கு. இவ்வெல்லைகளுக்கிடையிலுள்ள 0.40¾ ஏக்கர் புஞ்சை அல்லது 0.16.50 ஹெக்டேர் புஞ்சை நிலம், 22'164 அடி வடக்குப் பார்த்த சிமெண்ட் ஷீட் கோழிப் பண்ணை மற்றும் கிழக்குப் பார்த்த 17'17 அடி கேபிப்புக் கிடங்கு, அதன் சன்னல்கள், கதவு பிட்டிங்குகள் மற்றும் மின்சார இணைப்பு எண்.03-08-100-1274, அதன் பிட்டிங்குகளுடன், மற்றும் வழித்தட உரிமை ஒப்பந்த ஆவண எண்.2960/2022 ல் குறிப்பிட்டுள்ளபடியான வழித்தட உரிமையுடன், அதாவது மறு சர்வே எண்.198 ல் உள்ள தென்வடல் ரோட்டிலிருந்து மேற்கு திசையில் மறு சர்வே எண்.199/3B ல் உள்ள கிழமேல் ரோட்டின் வழியாக மற்றும் மறு சர்வே எண்.199/2B யின் (உட்பிரிவின்படி மறு சர்வே எண்.199/2B1) ன் தென்புறக் கடைசியிலுள்ள கிழமேல் ரோட்டில் மற்றும் மறு சர்வே எண்.199/2C ன் மேற்புற பகுதியில் அமைந்த 24 அடி அகல தென்வடல் மற்றும் கிழமேல் ரோட்டில், நிர்மலின் 0.17 ஏக்கர் புஞ்சை நிலம் வரையான வழித்தட மற்றும் வழக்கமான வழித்தட உரிமைகளுடன். **அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள் : 10.993147 N, 77.516951 E**	**லாட்-2 :** **1) ரூ.59,00,000/-** (ரூபாய் ஐம்பத்து ஒன்பது லட்சம் மட்டும்) **2) ரூ.5,90,000/-** (ரூபாய் ஐந்து லட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்) **3) ரூ.20,000/-** (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) **மின் ஏலத் தேதி மற்றும் நேரம் : 18.12.2026 (வெள்ளிக்கிழமை) காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை**

மின்-ஏலத்திற்கான நிபந்தனை விபரங்கள்

இவ்விற்பனையானது பிணைய நலன் (அமலாக்க) விதிகள் 2002ல் சொல்லப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் கீழ்க் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்டது.

1. சொத்துக்கள் 'எங்குள்ளதோ அங்கு', 'என்ன உள்ளதோ அது' மற்றும் 'உள்ளதுள்ளவாறே' என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
2. அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிணையச் சொத்தின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் நன்கு அறிந்த வகையில் சரியானது, எனினும் அதில் காணப்படும் எந்த ஒரு தவறு, விடுதல் மற்றும் திருத்தத்துக்குப் பொறுப்பாக மாட்டார்.
3. விற்பனையானது கீழே ஒப்பிடப்பட்டுள்ள அலுவலரால் https://baanknet.com இணையதளத்தில் உள்ள மின் ஏல மேடையில் **18.12.2026 (வெள்ளிக்கிழமை); காலை 11.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை** நடத்தப்பெறும்.
4. விற்பனை தொடர்பான மேலும் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கீழ்க் குறிப்பிட்டுள்ள இணைய தளங்களைக் காணவும். **https://baanknet.com & www.pn